பக்கங்கள் 13+5

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 19 ஞாயிற்றுக்கிழமை 04.08.2024 | அதிர்வு 03

## பஸ் விபத்தில் 22 பேர் காயம்

மஹாஓயா – அரலகங்வில வீதியில் எம்.டி.கே. ஏரிக்குச் செல்லும் சந்திக்கு அருகில் நேற்று இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்தில் 22 பேர் காயமடைந்து

05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தலையில் தாக்கிக் கை, கால்கள் முறிக்கப்பட்டு பிறந்து 45 நாளான ஆண் குழந்தை படுகொலை




### யாழ். அளவெட்டியில் கொடூரம் பொலிஸார் தீவிர விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அளவெட்டி பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த ஆண் குழந்தையின் தலையில் தாக்கப்பட்டு காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் செயற்கையான முறையில் மரணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

04

# மொட்டு உறுப்பினர்கள் அடைக்கலம் தேடியே ரணிலோடு இணைவு

## இப்படி சஜித் சாடல்



“அன்று ராஜபக்ஷ குலத்தை முத்தமிட்டு நாட்டையே நாசமாக்கிய தரப்பினர் இன்று ஜனாதிபதி ரணிலுடன் கைகோர்த்து தமக்குப் பாதுகாப்பான இடத்தைத் தேடி வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியிலும் ஐக்கிய மக்கள் கூட்டணியிலும் இந்தத் திருடர்களுக்கு இடமில்லை.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரேலியா மாவட்ட விவசாயிகள் மாநாடு இன்று ஹங்குராங்கெத்தையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

05



# அம்பாறையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இரண்டு பொலிஸார் உட்பட நால்வர் உயிரிழப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், நாமல் ஓயா பகுதியில் உள்ள கராண்டுகல உப பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரினால் இந்தத் துப்பாக்கிச்சூடு இன்று அதிகாலை 2.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இக்கினியாகல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவி மற்றும் மாமி ஆகியோர்

05

# ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்க கம்பஹாவில் கூட்டு செயற்றிட்டம்!



வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்கும் வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இணைந்து கம்பஹா தொகுதியில் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளன.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தக் கூட்டு செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டது.

கம்பஹா தொகுதியில் கம்பஹா மாநகர சபை மற்றும் கம்பஹா பிரதேச சபை என இரண்டு உள்ளூராட்சி சபைகள் உள்ளன. இந்நிகழ்வின் அழைப்பாளராக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் லக்ஷ்மன் குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்றிய நாலக கொடஹேவா தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இருக்கின்றார். எனவேதான் கம்பஹா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க செயற்படுகின்றார்.

கம்பஹா உள்ளூராட்சி சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மொட்டுக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 22 ஆகும். இதில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நேற்று நடைபெற்ற கூட்டத்தில் 16 பேர் கலந்துகொண்டனர்.

கம்பஹா நகர சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மொட்டுக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 17 ஆகும். அவர்களில் 12 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளனர்.

இது தவிர, ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா தொகுதி அமைப்பாளர் வருண தீப்த ராஜபக்ஷவுடன் உள்ளூராட்சி சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.தே.க. பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## ஐக்கிய மக்கள் சக்தியின்

# கண்டி மாவட்ட அமைப்பாளராக துரை மதியுகராஜா நியமனம்!



ஐக்கிய மக்கள் சக்தி கண்டி மாவட்ட அமைப்பாளராக துரை மதியுகராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் விவசாய மாநாடு இன்று நுவரெலியா – ஹங்குராங்கெத்தையில் நடைபெற்றது. இதன்போது, அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட மத்திய மாகாண சபையின் உப தவிசாளராக இரண்டு தடவைகளும், அவைத் தலைவராக பதவி வகித்தவரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் சிரேஷ்ட உப தவிசாளரும், 25 வருடங்களுக்கும் மேலாக கண்டி மாவட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதான அமைப்பாளராகவும் பணியாற்றியவருமான துரை மதியுகராஜா ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட அமைப்பாளராகக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நியமிக்கப்பட்டார்.



# மொட்டுக் கட்சியை முழுமையாக கைவிட்ட 28 தமிழ் எம்.பிக்கள்!

## இதுவரை 9 தமிழ் எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவு

தற்போதைய நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 9 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு நேசக்கரம் நீட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்கும் முயற்சிக்கு ஐந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் ஏழு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாருக்கு ஆதரவு என்பது பற்றி தமது நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு எம்.பிக்களும், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதற்கு அறைகூவல் விடுத்துள்ளனர்.

2020 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்களின் அங்கீகாரத்துடன் 25 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிஉயர் சபைக்கு தெரிவாகினர். தேசியப்பட்டியல் ஊடாகவும் மூவருக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் த.கலையரசனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் செல்வராசா கஜேந்திரனும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் சுரேன் ராகவனும் தேசியப்பட்டியல் ஊடாக சபைக்கு வந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த புளொட், ரெலோ என்பன தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தில் தேர்தலில் களம் கண்டன. ரெலோவுக்கு மூன்று ஆசனங்களும், புளொட்டுக்கு ஒரு ஆசனமும் கிடைக்கப்பெற்றது.

இதில் புளொட் மற்றும் ரெலோ என்பன (4 எம்.பிக்கள்) தமிழ்ப் பொது வேட்பாளர் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும், ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்று தமிழரசுக் கட்சி (6 எம்.பிக்கள்) இன்னும் முடிவெடுக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தெரிவான அங்கஜன் இராமநாதனும் தமது நிலைப்பாட்டை இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. சஜித் யாழ்ப்பாணம் சென்றபோது அவருடனும் இருந்தார், ஜனாதிபதி ரணில் யாழ். சென்றபோதும் அவருடன் இணைந்தும் வலம் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கும் எம்.பிக்கள்

1. டக்ளஸ் தேவானந்தா (ஈ.பி.டி.பி)
2. குலசிங்கம் திலீபன் (ஈ.பி.டி.பி)
3. ஜீவன் தொண்டமான் (இ.தொ.கா.)
4. மருதபாண்டி ராமேஷ்வரன் (இ.தொ.கா.)
5. வடிவேல் சுரேஷ் ( ஐக்கிய மக்கள் சக்தி)
6. அ.அரவிந்தகுமார் (ஐக்கிய மக்கள் சக்தி)
7. பிள்ளையான் (தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்)
8. எஸ். வியாழேந்திரன் (தமிழர் முற்போக்குக் கழகம்)
9. சுரேன் ராகவன் (தேசியப் பட்டியல்)

### சஜித்துக்கு ஆதரவளிக்கும் தமிழ் எம்.பிக்கள்

1. மனோ கணேசன் (தமிழ் முற்போக்குக் கூட்டணி)
2. வேலுசாமி இராதாகிருஷ்ணன் (தமிழ் முற்போக்குக் கூட்டணி)
3. பழனி திகாம்பரம் (தமிழ் முற்போக்குக் கூட்டணி)
4. எம். வேலுகுமார் (தமிழ் முற்போக்குக் கூட்டணி)
5. எம். உதயகுமார் (தமிழ் முற்போக்குக் கூட்டணி)

### தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பவர்கள்

1. சி.வி. விக்னேஸ்வரன் (தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி)
2. செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ)
3. எஸ்.வினோநோதராதலிங்கம் (ரெலோ)
4. கோவிந்தன் கருணாகரம் (ரெலோ)
5. தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்)

### தீர்மானம் எடுக்காத எம்.பிக்கள்

1. சி.சிறீதரன் (தமிழரசுக் கட்சி)
2. எம்.ஏ.சுமந்திரன் (தமிழரசுக் கட்சி)
3. சார்ள்ஸ் நிர்மலநாதன் (தமிழரசுக் கட்சி)
4. இரா.சாணக்கியன் (தமிழரசுக் கட்சி)
5. எஸ். குகதாசன் (தமிழரசுக் கட்சி)
6. தவராசா கலையரசன் (தமிழரசுக் கட்சி)
7. அங்கஜன் இராமநாதன் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி)

### புறக்கணிப்பு முடிவு

1. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி)
2. செல்வராசா கஜேந்திரன் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி)

# தமிழ்ப் பொது வேட்பாளர் யார்? வவுனியாவில் நாளை தீர்மானம்

## இறுதிப் பட்டியலில் விக்கி உள்ளிட்ட நால்வரின் பெயர்கள்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் சார்பில் களமிறக்கப்படும் பொது வேட்பாளர் யார் என்பது குறித்து நாளை திங்கட்கிழமை வவுனியாவில் தீர்மானிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளர் பட்டியலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரநேரு சந்திரகாந்தன், பா.அரியநேத்திரன் ஆகியோரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் கே.வி.தவராசா மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரனும் காணப்படுகின்றனர்.

இந்த விடயம் சம்பந்தமாக மேலும் தெரியவருவதாவது:

சிவில் அமைப்புக்களின் ஒருங்கிணைவு என்ற அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட தமிழ் மக்கள் பொதுச்சபையின் ஏழு பிரதிநிதிகளும் அரசியல்கட்சிகள் ஏழினது பிரதிநிதிகளும் கூட்டிணைந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை ஸ்தாபித்திருந்தனர்.

இந்தப் பொதுக்கட்டமைப்பானது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக பல்வேறுபட்ட சந்திப்புக்களை நடத்தியிருந்தது.

எனினும், ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படும் நபரைத் தெரிவு செய்வதற்காக நீண்ட பட்டியலொன்று தயார் செய்யப்பட்ட நிலையில் தற்போது சந்திரநேரு சந்திரகாந்தன், கே.வி. தவராசா, பா.அரியநேத்திரன் மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் இறுதிப்பட்டியலில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக அரசியல் கட்சிகள் சாராதவராகவும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணாகவும் வேட்பாளர் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தேடல்கள் இடம்பெற்றன.

பின்னர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசியல் சார்பற்ற ஆணாக இருந்தாலும் போதுமானது என்ற அடிப்படையில் தேடப்பட்டபோதும் பொருத்தமானவர்களை அடையாளம் காண முடிந்திருக்கவில்லை.



அதனையடுத்து வடக்கில் இருந்து அரசியல் சாராத ஒருவரை களமிறக்குவதற்கு முயற்சிக்கப்பட்டபோதும் அதுவும் பலனளிக்கவில்லை. அதனையடுத்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிவில் அமைப்பினர் பிரதிநிதிகளைக் கோரியபோதும் அவர்களும் பின்னடித்தனர்.

இதற்கிடையில் பொதுவேட்பாளர் களமிறக்கப்படும் கட்சி மற்றும் சின்னம் சம்பந்தமாகவும் இணக்கப்பாடற்ற நிலைமைகள் உருவெடுத்தன. இந்நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரைக் களமிறக்குவதாக இருந்தால் கட்சிகளில் தங்கியிருக்கத் தேவையில்லை என்ற நிலைமை உருவானது.

இவ்வாறான பின்னணியில்தான் மேற்படி நபர்களின் பெயர்கள் இறுதிப் பட்டியலுக்கு வந்துள்ளன. இதில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத போதும் அனைத்துக் கட்சிகளும் அவரை ஏற்றுக்கொள்வார்கள் என்ற அடிப்படையில் சி.வி.விக்னேஸ்வரனின் கட்சி ஊடாக களமிறக்குவதற்கு முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம், கே.வி.தவராசாவை பொறுத்தவரையில், தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற விடயத்தில் அனைத்து தரப்பினரும் இறுதியும் உறுதியுமாக இருந்தால் களமிறங்குவதற்குத் தயாராக இருக்கின்றேன் என்ற தொனிப்பட சமிக்ஞை வெளியிட்டுள்ளார்.

இலண்டனில் தங்கியிருக்கும் சந்திரகாந்தனைப் பொறுத்தவரையில், தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்குவதற்கு அவர் தயாராக இருப்பதாக அவரை அணுகியவர்களிடத்தில் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், அதன் பின்னர் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்க முடியாது என்ற நிபந்தனை நீக்க வேண்டும் என்றும், அதேபோன்று இந்த விடயம் சம்பந்தமாக இலங்கைக்கு வருகை தந்தே நேரில் உரையாட முடியும் என்றும் கூறியுள்ளதாகத் தகவல்கள் உள்ளன.

இதேநேரம், சந்திரகாந்தனை நிறுத்துவது மிகப் பொருத்தமானது என்று பத்து காரணங்களைச் சுட்டிக்காட்டி தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் ஏனைய அங்கத்தவர்களுக்கு சி.வி.விக்னேஸ்வரன் தகவல் அனுப்பியுள்ளார்.

எந்தவொரு தரப்பினரும் போட்டியிடுவதற்குத் தயாராக இல்லாவிட்டால் கோட்பாட்டு ரீதியாகத் தான் ஆதரிக்கும் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை வலுப்படுத்துவதற்காகக் களமிறங்குகின்றேன் என்று தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அரியநேத்திரனும் தன்னை அணுகியவரிடத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எந்தவொரு தரப்பினரும் பொருந்தாத நிலையில் இறுதியாக சி.வி.விக்னேஸ்வரம் எம்.பியைப் பரிசீலிப்பது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக அவர் இரண்டாவது வாக்கு தொடர்பில் அதிகமாகப் பிரஸ்தாபித்து வருவதால் அவருடைய பெயரை இறுதி நிலையில் வைப்பதற்குப் பொதுக்கட்டமைப்பின் சிவில் தரப்பினர் தீர்மானித்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் மேற்படி நால்வரில் ஒருவரை இறுதி செய்வதில் நெருக்கடியான நிலைமைகள் தோன்றினால் பொதுக்கட்டமைப்பின் அங்கத்தவரும், அரசியல், சிவில் செயற்பாட்டாளருமான செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளையை இறுதி ஆயுதமாகப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தலையில் தாக்கி...

சசிரூபன் நிகாஸ் என்ற பிறந்த 45 நாளான குழந்தை நேற்று அளவெட்டிப் பகுதியில் உயிரிழந்தது.

குழந்தைக்குத் தாய் பால் ஊட்டிய நிலையில் சில மணி நேரங்களுக்குப் பின்னர் குழந்தை மயக்கமுற்றது என்று தெரிவிக்கப்பட்டு குழந்தை அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது குழந்தை உயிரிழந்தது என்று வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

குழந்தையின் சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்ட நிலையில் மரண விசாரணையை வலிகாமம் கிழக்கு பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

குழந்தையின் உடலில் காயங்கள் மற்றும் தளும்புகள் காணப்படுவதன் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இன்று உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குழந்தையின் கை, கால்கள் முறிக்கப்பட்டிருந்த நிலையில் குழந்தையின் தலையில் தாக்கப்பட்டு காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் செயற்கையான முறையில் மரணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

குழந்தையின் தந்தை தங்கு வேலைகளுக்குச் சென்று வந்த நிலையில் தாயுடனேயே குறித்த குழந்தை வளர்ந்துள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்









## மொட்டு உறுப்பினர்கள்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்த மற்றொரு சட்டவிரோத கொடுக்கல் – வாங்கலுக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. வி.எப்.எஸ். நிறுவனத்துக்கு விலைமனு கோரல் இல்லாமல், இணைய வீசா சேவை தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள முறைமையை மாற்றி, வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து சேவையைப் பெற மேற்கொண்ட நடவடிக்கையால் 1.2 பில்லியன் டொலர்களை இழந்துள்ளோம். இந்தத் திருட்டை நிறுத்தி இந்தப் பணத் தொகையை பயன்படுத்தி பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகளை வழங்கியிருக்க முடியும்.

வி.எப்.எஸ். கொடுக்கல் – வாங்கல் மூலம் தமது சொந்த நலனையே இந்தத் திருடர்கள் முன்னெடுத்தனர். ரவூப் ஹக்கீம், சுமந்திரன், சம்பிக்க ரணவக்க, அசோக் அபேசிங்க, ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் உபுல் ஜயசூரிய தலைமையிலான ஏனைய சட்டத்தரணிகளின் வலுவான வாதங்களை ஏற்றுக் கொண்டு வி.எப்.எஸ். கொடுக்கல் – வாங்கல் மோசடிக்கு உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இவ்வாறானதொரு தீர்ப்பை வழங்கிய உயர்நீதிமன்றத்துக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொலிஸ்மா அதிபரை நியமித்த முறையில் காணப்பட்ட குறைபாடுகளைக் கண்டு, உயர்நீதிமன்றம் தடை விதித்த போது, ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசு அந்தத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் விமர்சித்தது. கொடுக்கல் – வாங்கல் மூலம் 1.2 பில்லியன் டொலர் நஷ்டம் ஏற்பட்டுள்ள நிலையில், உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் தடை விதித்துள்ளமை தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசு என்ன கூறப்போகின்றனர் என்பதை அறிய விரும்புகின்றோம்.

திருடர்களைப் பிடிப்போம் எனப் பெரிதாகக் கூறிக்கொள்ளும் சிவப்பு சகோதரர்கள் வி.எப்.எஸ். கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் எந்தப் பேச்சும் இல்லை. வி.எப்.எஸ். கொடுக்கல் – வாங்கல் ஒப்பந்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நானே முதலில் வெளிக்கொணர்ந்தேன். இன்று பல்வேறு தரப்பினரும் நாடு முழுவதும் பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். சிவப்பு சகோதரர்கள் திருடர்களைப் பிடிப்பதாகச் சொன்னாலும் திருடர்களுடன் டீல் போட்டுள்ளனர்.

ராஜபக்ஷக்களுடன் கைகோர்த்து அரசியல் செய்தவர்கள் தற்போது ஒருவர் பின் ஒருவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்து வருகின்றனர். மக்களே இவர்களின் முகங்களை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். இவர்கள் அடைக்கலம் தேடியே ரணிலோடு இணைகின்றனர். அன்று ராஜபக்ஷ குலத்தை முத்தமிட்டு நாட்டையே நாசமாக்கிய தரப்பினர் இன்று ஜனாதிபதியோடு கைகோர்த்து தமக்குப் பாதுகாப்பான இடத்தைத் தேடி வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியிலும் ஐக்கிய மக்கள் கூட்டணியிலும் இந்தத் திருடர்களுக்கு இடமில்லை.

தனிப்பட்ட நன்கொடையாளர்களின் நிதிப் பங்களிப்பில் எதிர்க்கட்சியால் முன்னெடுக்கப்பட்டு வந்த ‘பிரபஞ்சம்’ மற்றும் ‘மூச்சு’ திட்டங்களை இடைநிறுத்தியுள்ளனர். ஆனால், மக்கள் வரிப் பணத்தால் அரச நிதியில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை ஜனாதிபதி திறந்து வைக்கும் வைபவங்களை நடத்துகின்றார். சட்டம் யாவருக்கும் ஒன்று போல் இருக்க வேண்டும். ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்குவது போன்று பிரபஞ்சம், மூச்சுத் திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும்.”

– என்றார்.

## அம்பாறையில்...

உயிரிழந்ததுடன் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்ட 33 வயதான பொலிஸ் உத்தியோகத்தர் தனது துப்பாக்கியினால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குள் உள்ளடங்கும் கராண்டுகல உப பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குடும்பப் பிரச்சினை காரணமாக இடம்பெற்றுள்ளதா அல்லது இதர காரணங்களினால் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பில் விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## பஸ் விபத்தில்...

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஹா ஓயாவிலிருந்து அரலகங்வில திசை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் எதிர்த் திசையில் வந்த மற்றுமொரு தனியார் பஸ்ஸுடன் மோதியது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இரண்டு பஸ்களிலும் பயணித்த 2 ஆண்கள், 12 பெண்கள், 6 சிறுவர்கள் மற்றும் 2 சிறுமிகள் காயமடைந்து மஹாஓயா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பஸ் ஒன்றின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மஹாஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# குழப்பங்களின் தோற்றுவாய்

தமது தற்போதைய பதவி காலத்தை நீதித்துறையோடு - உயர் நீதிமன்றத்தோடு - ஒரு முண்டு முண்டி, பெரும் களேபரத்துடன்தான் முடிப்பார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று தோன்றுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமுமே ஏழு வாரங்கள் கூட இல்லை. அதற்கிடையில் உயர்நீதிமன்ற உத்தரவுகளை இயன்ற அளவு தூக்கிக் கடாசி - தன் கைவரிசையை காட்டி - முடிப்பதில் முழுச் சந்நதம் கொண்டு நிற்கின்றார் ஜனாதிபதி விக்கிரமசிங்க.

சபாநாயகரும் ஜனாதிபதியும் இணைந்து, அரசமைப்புக் கவுன்ஸிலின் தீர்மானத்தை திரித்துக்காட்டி, அதன் மூலம் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமித்தமை உயர் நீதிமன்றத்தில் பல்லிளிக்கும் விவகாரமாகப் போன நிலையில், அந்த நியமனத்தை இடைநிறுத்த உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருக்கின்றது. அந்த வழக்கு விசாரணை முடிவடையும் வரை ஒரு பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்குமாறு உயர் நீதிமன்றமே ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்திருக்கின்றது.

ஆனால் அதைச் செய்ய மறுத்து பொலிஸ்மா அதிபர் நியமனத்தை இடைநிறுத்திய உயர்நீதிமன்றத்தின் முடிவை கேள்விக்குறியாக அர்த்தப்படுத்தும் விதத்தில் நடந்து கொள்கின்றார் ஜனாதிபதி விக்கிரமசிங்க.

பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க மறுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை பொலிஸ்மா அதிபரின் பணியை ஆற்றுமாறு பணித்திருக்கின்றார்.

இது நாட்டின் நிர்வாகத் துறைக்கு உட்படாத - பரிச்சயமற்ற - குழப்பமான - பணிப்புரையாகும்.

சட்டப்படியாக அமையாத இந்த உத்தரவுக்கு எதிராகவும் பொதுமக்கள் உயர் நீதிமன்றத்திற்கு போவார்கள். விளைவுகளை ஜனாதிபதியும் சேர்ந்துத்தான் அனுபவிக்க வேண்டி நேரிடும் போல தோன்றுகின்றது.

பொதுஜன பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வலது கை. அவரே பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னக்கோனை நியமிக்க ஜனாதிபதியிடம் வற்புறுத்தி நின்றவர். தேசபந்து தென்னக்கோன் மூலம் பொலிஸ்மா அதிபருக்குரிய அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புக்களை தாமே ஆற்றி வந்தார் டிரான் அலஸ். அரசியல்வாதியாக தாம் ஆற்ற முடியாத அந்தப் பணியை, தம்மிஷ்டப்படி ஆற்றுவதற்கு தேசபந்து தென்னக்கோன் போன்ற ஒரு பொம்மைத் தலை அமைச்சருக்குத் தேவைப்பட்டது.

அதனால்தான் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் வைத்திருப்பதற்கு அவர் துடியாய்த் துடித்தார். துடிக்கிறார். இப்போது தேசபந்து தென்னக்கோனிடமிருந்து பொலிஸ்மா அதிபர் பதவி தற்காலிகமாகவேனும் பறிபோய் விட்டது.

இப்போது புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமித்தால் அவர் தமக்கு அடங்கிப் போகாவிட்டால் தமக்கு சிக்கல் என்று அல்லலுறும் அமைச்சர் டிரான் அலஸின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் விதத்தில் பொலிஸ்மா அதிபரின் பொறுப்புக்கள் டிரான் அலஸின் அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளன.

இது சட்ட ரீதியாக ஒழுங்கானது அல்ல. சட்ட முறையற்ற ஏற்பாடு. இதற்கு எதிராக பொதுநல அமைப்புக்கள் இணைந்து நீதிமன்றுக்குச் செல்லும் சூழல் ஏற்பட்டு வருகின்றது.

மறுபுறத்தில் ஏற்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் நியமன வெற்றிடத்திற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவே இந்தத் தேர்தல் சமயத்தில் உரிய ஒருவரை பதிலாக தேர்ந்தெடுத்து நியமிக்க முடியும் என்ற ஆலோசனையை சட்டமா அதிபர் திணைக்களம் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு வழங்கி இருப்பதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

சட்டமா அதிபரின் ஆலோசனையை நிறைவேற்ற முடியாத நிலையில் பதில் பொலிஸ்மா அதிபரின் பொறுப்புக்களை தமது உத்தரவுக் கடிதம் மூலம் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கி குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறார் ஜனாதிபதி.

இவையெல்லாம் ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் பெரும் சிக்கல்களை தோற்றுவிக்கும் சூழலை ஏற்படுத்தி நிற்கின்றன.

# மாற்றுக் கட்சியின் வேட்பாளரை ஆதரிக்கும் உறுப்பினர்களுக்கு பொதுஜன பெரமுன கடிதம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளரினால், அந்த கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி கூடிய அரசியல் குழு, ஜனாதிபதித் தேர்தலுக்கு தமது கட்சியிலிருந்து ஒரு வேட்பாளரைப் பெயரிடுவதற்கான யோசனைகளை நிறைவேற்றியுள்ளது.

அதன்படி, வேறு வேட்பாளருக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவளித்தால், குறித்த உறுப்பினர் கட்சியின் ஒழுக்கத்தை மீறியவராகக் கருதப்பட்டு, அவரது கட்சியின் உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு, கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்டத் தலைவராகச் செயற்பட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்திருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே கம்பஹா மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவை நியமிக்க அந்த கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

# உறுமய வேலைத்திட்டத்தை இடைநிறுத்த நடவடிக்கை

உறுமய காணி உறுதிப்பத்திர விநியோகம் உள்ளிட்ட பல வேலைத் திட்டங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அந்த வேலைத்திட்டங்களைத் தேவைக்கு ஏற்ப மீள அமுல்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





# குவைத்தில் கைது செய்யப்பட்டிருந்த 24 இலங்கையர்களும் விடுவிப்பு

குவைத்தில் கைதான 24 இலங்கையர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி 24 இலங்கையர்களும் கடந்த 2ஆம் திகதி அந்த நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

“அக்கரையில் நாம்” என்ற அமைப்பின் குவைத் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இசை நிகழ்ச்சியில் மேற்படி இலங்கையர்கள் கைதாகினர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிய அனுமதியின்றி இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த குற்றச்சாட்டில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் இசைக்கலைஞர்களும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை கணிப்பது கடினமாக உள்ளது

## ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை கணிப்பது மிகவும் கடினமானதாகிவருகின்றது என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோசி ஹிடேகி பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையுடன் இராஜதந்திர உறவுகளை நாங்கள் ஆரம்பித்த காலம் முதல் அனைத்து அரசாங்கங்களுடனும் நாங்கள் சிறந்த உறவை கொண்டிருக்கின்றோம்.

எனினும் அனைத்தும் புதிய அரசாங்கத்தை பொறுத்தது. பொருளாதா கொள்கையில் தொடர்ச்சி பேணப்படும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

இலங்கை தான் ஏற்றுக்கொண்ட சர்வதேச நாணயநிதியத்தின் சீர்திருத்த திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே கடன்மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கை கைசாத்திடப்பட்டது.

ஜப்பான் மாத்திரமல்ல கடன் மறுசீரமைப்பிற்கு இணங்கிய ஏனைய அனைத்து நாடுகளும் இந்த அனுமானத்தின் அடிப்படையிலேயே அதற்கு ஆதரவளித்தன.

கொள்கையில் தொடர்ச்சி காணப்பட்டால் இலங்கை மக்களிற்கு மாத்திரமல்ல முதலீட்டாளர்களிற்கும் அதனால் நன்மை ஏற்படும்.”– என்றார்.






# தேர்தல் அச்சு செலவினம் 3 மடங்கு அதிகரிக்கக்கூடும்

## அரச அச்சகமா அதிபர் தெரிவிப்பு

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும்போது, இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சு செலவினம் மூன்று மடங்கு அதிகரிக்கக்கூடும் என அரச அச்சகமா அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சுப் பணிகளுக்காக சுமார் 800 மில்லியன் ரூபா செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டின் நீளம் 27 அங்குலமாக இருந்தது.

இந்த முறை வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், வாக்குச் சீட்டின் நீளம் அதிகரிக்குமாயின் அச்சிடும் செலவுகளும் அதிகரிக்கக் கூடும் எனவும் அரச அச்சகமா அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.





# வயநாடு மலை உச்சியின் குகையில் சிக்கியிருந்த குழந்தைகள் உட்பட 6 பேரை மீட்டது வனத்துறை

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த கனமழை காரணமாக பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினரும் இராணுவத்தினாரும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறனர். இதுவரை 300 இற்கும் மேற்பட்டோர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் உள்ள ஒரு மலை உச்சியின் குகையில் சிலர் சிக்கியிருப்பது தெரிய வந்தது. இதையடுத்து, கல்பெட்டா ரேஞ்ச் வன அதிகாரி கே.ஹாஷிஸ் தலைமையிலான 4 பேர் துணிச்சலாக மலை உச்சிக்கு சென்று அங்கிருந்த 4 குழந்தைகள் மற்றும் பெற்றோர் உள்ளிட்ட 6 பேரை பத்திரமாக மீட்டு வந்துள்ளனர். அவர்கள் பனியா பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கேரள முதல்வர் பினராயி விஜயன் எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில்,

“வனத்துறை அதிகாரிகள் 8 மணி நேரம் போராடி, நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் மலை உச்சியில் சிக்கியிருந்த 6 பேரை காப்பாற்றி உள்ளனர். வனத்துறை அதிகாரிகளின் துணிச்சல் மிக்க செயல், பிரச்சினைகளைசமாளிக்கும் கேரளாவின் உறுதிப்பாட்டை நினைவுபடுத்துவதாக உள்ளது. நம்பிக்கையுடன் ஒன்றுபடுவோம்” என பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து வனத் துறை அதிகாரி ஹாஷிஸ் கூறும்போது,

“பழங்குடியின மக்கள் வனப்பகுதியில் கிடைக்கும் பொருள்களை சாப்பிட்டு உயிர் வாழ்கின்றனர். மேலும் இவர்கள் மற்றவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வதையும் தவிர்த்து வருகின்றனர். எனினும், கனமழை, நிலச்சரிவு உள்ளிட்ட பேரிடரின்போது உணவுப்பொருள் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.

அந்த வகையில் குழந்தைகளின் தாய் உணவு தேடிக் கொண்டிருந்த போதுதான் எங்கள் கண்ணில் பட்டார். இதையடுத்து அங்கு சென்றபோது 6 பேர் இருந்தனர். பின்னர் எங்களுடன் வருமாறு பேச்சுவார்த்தை நடத்தினோம். இதற்கு குழந்தைகளின் தந்தை சம்மதம் தெரிவித்தார். இதையடுத்து குழந்தைகளை எங்கள் முதுகில் கயிறு மூலம் கட்டிக் கொண்டு மலையில் இருந்து இறங்கினோம். பெற்றோரும் எங்களுடன் இறங்கி வந்தனர்” – என்றார்.




இதுகுறித்து வனத் துறை அதிகாரி ஹாஷிஸ் கூறும்போது,

“பழங்குடியின மக்கள் வனப்பகுதியில் கிடைக்கும் பொருட்களை சாப்பிட்டு உயிர் வாழ்கின்றனர். மேலும் இவர்கள் மற்றவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வதையும் தவிர்த்து வருகின்றனர். எனினும், கனமழை, நிலச்சரிவு உள்ளிட்ட பேரிடரின்போது உணவுப்பொருள் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.

அந்த வகையில் குழந்தைகளின் தாய் உணவு தேடிக் கொண்டிருந்த போதுதான் எங்கள் கண்ணில் பட்டார். இதையடுத்து அங்கு சென்றபோது 6 பேர் இருந்தனர். பின்னர் எங்களுடன் வருமாறு பேச்சுவார்த்தை நடத்தினோம். இதற்கு குழந்தைகளின் தந்தை சம்மதம் தெரிவித்தார். இதையடுத்து குழந்தைகளை எங்கள் முதுகில் கயிறு மூலம் கட்டிக் கொண்டு மலையில் இருந்து இறங்கினோம். பெற்றோரும் எங்களுடன் இறங்கி வந்தனர்” – என்றார்.



# இமாச்சல பிரதேசத்தில் பெய்த கனமழையால் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட கிராமம்

இமாச்சல பிரதேச மாநிலம் குல்லு, மண்டி மற்றும் சிம்லா பகுதிகளில் கடந்த சில தினங்களுக்கு முன்பு கனமழை கொட்டித் தீர்த்தது. சில இடங்களில் மேகவெடிப்பு ஏற்பட்டது.

இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பல கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. 60 இற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த 6 பேரின் உடல்கள் இது வரை மீட்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட சமேஜ் கிராமத்தைச் சேர்ந்த அனிதா தேவி கூறும்போது,

“இரவில் தூங்கிக் கொண்டிருந்தோம். அப்போது திடீரென பயங்கர சத்தம் கேட்டதும் வீடே அதிர்ந்தது. வெளியில் எட்டிப் பார்த்தபோது கிராமமே வெள்ளத்தில் அடித்துச் சென்றது.

இதையடுத்து, உடனடியாக வீட்டிலிருந்து வெளியே வந்த நாங்கள் அருகில் உள்ள பகவதி காளி கோயிலில் தஞ்சமடைந்தோம். இரவு முழுவதும் அங்கேயே தங்கி இருந்தோம். எங்கள் வீடு மட்டுமே தப்பிப் பிழைத்தது. என் கண் முன்னே எங்கள் கிராமத்தில் இருந்த அனைத்து வீடுகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.” – என்றார்.

# மணிப்பூரில் சட்டவிரோத குடியேறிகள் 5 ஆண்டுகளில் 10,675 பேர் அடையாளம்

மணிப்பூரில் கடந்த 5 ஆண்டுகளில் சட்டவிரோத குடியேறிய 10 ஆயிரத்து 675 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மணிப்பூர் சட்டப் பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர் சுர்ஜாகுமார் ஒக்ராம் எழுப்பிய கேள்விக்கு முதல்வர் பிரேன் சிங் அளித்த பதில் தெரிவிக்கையில்,

“மணிப்பூரில் கடந்த 5 ஆண்டுகளில் 10 ஆயிரத்து 675 சட்டவிரோத குடியேறிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

இவர்கள் மியான்மர், சீனா, பங்களாதேஷ், நோர்வே மற்றும் நேபாளத்தை சேர்ந்தவர்கள். இவர்களில் 85 பேர், 5 ஆண்டுகளில் நாடு கடத்தப்பட்டுள்ளனர். தற்போது மணிப்பூரில் உள்ள சட்டவிரோத குடியேறிகளில் 143 பேர் தடுப்புக் காவல் மையங்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மற்றவர்கள் தற்காலிக குடியிருப்புகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக மாநில அரசு இதுவரை 85 லட்சம் ரூபாவுக்கு மேல் செலவிட்டுள்ளது.”– என்றார்.

மணிப்பூரில் கடந்த ஆண்டு மே மாதம் இனக்கலவரம் வெடித்ததில் இருந்து சட்டவிரோத குடியேற்றம் குறித்த கேள்வி முக்கியத்துவம் பெற்றுள்ளது.





# அமெரிக்க போர் கப்பல்கள், விமானங்கள் விரைவதால் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட திடீர் போர் பதற்றம்

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் படுகொலைக்கு, இஸ்ரேலை பழிவாங்குவோம் என ஈரான் விடுத்த எச்சரிக்கையை அடுத்து அமெரிக்க போர்க் கப்பல்கள் மற்றும் விமானங்கள் மத்திய கிழக்கு பகுதிக்கு செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது.

ஈரான் ஜனாதிபதி மசூத் பெஸ்கியான் பதவியேற்பு விழாவில் பங்கேற்க, ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியா ஈரான் சென்றார்.

ஜூலை 31 இல் தலைநகர் டெஹ்ரானில் உள்ள விருந்தினர் இல்லத்தில் தங்கியிருந்தபோது அவர் படுகொலை செய்யப்பட்டார். அவரது படுக்கை அறையில் ஏற்கெனவே குண்டு வைக்கப்பட்டிருந்ததாக முன்பு தகவல் வெளியானது.

ஆனால் ஈரான் இராணுவம் நேற்று விடுத்த அறிக்கையில்,

“7 கிலோ எடையுள்ள குறுகிய தூரம் சென்று தாக்கும் ஏவுகணை மூலம் இஸ்மாயில் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது” என கூறியிருந்தது.

இஸ்மாயில், ஈரானுக்கு வரும்போதெல்லாம், ஈரான் இராணுவத்தின் பாதுகாப்பில் உள்ள இதே விருந்தினர் மாளிகையில்தான் தங்குவார். ஈரான் முன்னாள் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி கடந்த மே மாதம் ஹெலிகாப்டர் விபத்தில் இறந்தபோது, அவரது இறுதிச் சடங்கில் பங்கேற்க வந்த இஸ்மாயில் இங்குதான் தங்கியிருந்தார். அவரை அப்போதே படுகொலை செய்ய திட்டமிடப்பட்டது.

ஆனால் இப்ராகிம் ரைசி இறுதிச் சடங்கில் பங்கேற்க ஏராளமான கூட்டம் திரண்டிருந்ததால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டு, கடந்த 31 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல் உளவுப் பிரிவான மொசாத், தனது ஈரான் உளவாளிகள் மூலம் இந்த தாக்குதலை நடத்தி யிருக்கலாம் என கூறப்படுகிறது.

விருந்தினராக வந்த இஸ்மாயிலை படுகொலை செய்ததற்காக, இஸ்ரேல் கடும் தண்டனை அனுபவிக்கும் என ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா எச்சரிக்கை விடுத்திருந்தார்.

“பழிவாங்கும் நடவடிக்கை சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான விதத்தில் மிகக் கடுமையாக மேற்கொள்ளப்படும். இஸ்மாயில் மீதான தாக்குதலுக்கு அமெரிக்க அரசு ஆதரவு அளிப்பது குற்றச்செயல்” என ஈரான் இராணுவம் நேற்று அறிக்கை வெளியிட்டது.

“இஸ்ரேல் அனைவரையும் சண்டைக்கு இழுக்கிறது. எனவே இஸ்ரேல் மீது ஒருங்கிணைந்த தாக்குதல் நடத்தப்படலாம்” என ஹிஸ்புல்லா தலைவர் ஹாசன் நஸ்ரல்லாவும் சூசகமாக தெரிவித்திருந்தார்.

காசாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஏமனில் உள்ள ஹவுதி தீவிரவாதிகளும் இஸ்ரேலுக்கு எதிரான ஒருங்கிணைந்த தாக்குதலில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகத்தில் தங்கியிருந்த இராணுவ அதிகாரிகள் மீது இஸ்ரேல் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி விமான தாக்குதல் நடத்தியதற்கு பழிவாங்கும் வகையில், இஸ்ரேல் மீது ஈரான் கடந்த ஏப்ரல் 13 ஆம் திகதி 300 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. இவை அனைத்தையும் அமெரிக்க போர்க்கப்பல்கள் மற்றும் இஸ்ரேலிய படைகள் நடுவானிலேயே சுட்டு வீழ்த்தின.

அதேபோன்ற பாதுகாப்பை இஸ்ரேலுக்கு தற்போது வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முடிவு செய்துள்ளார். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் போனில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி பைடன், “அச்சுறுத்தலுக்கு எதிராக, இஸ்ரேலின் பாதுகாப்புக்கு அமெரிக்கா உதவும்” என தெரிவித்தார்.

இதையடுத்து அமெரிக்க கடற்படையில் உள்ள யு.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி போர்க்கப்பலை, ஓமன் வளைகுடா பகுதிக்கு செல்ல அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் லாயிட் ஆஸ்டின் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

ஓமன் வளைகுடா பகுதியில் ஏற்கெனவே யு.எஸ்.எஸ். தியோடர் ரூஸ்வெல்ட் விமானம் தாங்கி போர்க்கப்பல் உட்பட இதர போர்க்கப்பல்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளன.

மேலும், போர் விமானங்கள் படைப்பிரிவு, ஏவுகணைகள் வீசும் போர்க் கப்பல்கள் ஆகியவற்றையும் மத்திய கிழக்கு மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிக்கு செல்ல அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் உத்தரவிட்டுள்ளது. காசா மீதான தாக்குதல் தொடங்கியதில் இருந்து, இஸ்ரேலை பாதுகாக்க, அமெரிக்க படைகள் தற்போது மிகப் பெரியளவில் அனுப்பப்படுகின்றன.

இதுகுறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் ஒருங்கிணைப்பாளர் ஜான் கிர்பி கூறும்போது,

“ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் படுகொலைக்கு, பழிவாங்குவோம் என ஈரான் மதத் தலைவர் தெளிவாக அறிவித்துள்ளார். அவர்கள் இஸ்ரேல் மீது மற்றொரு தாக்குதல் நடத்த விரும்புகிறார்கள். இதனால் அப்பகுதியில் பாதுகாப்பை அதிகரிப்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும்.” என்றார்.

ஈரான் தாக்குதல் நடத்தினால், அதை எதிர்கொள்ள இஸ்ரேல் இராணுவமும் தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் தங்கள் வீடுகளுக்கு அருகில் அமைத்துள்ள பதுங்குக் குழிகளை தயார் நிலையில் வைத்திருக்கும்படியும், இஸ்ரேல் அரசு அறிவுறுத்தியுள்ளது. இஸ்ரேலில் உள்ள இந்தியர்களும் விழிப்புடன் இருந்து பாதுகாப்புவழிமுறைகளை பின்பற்றும்படி இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.



# ஹமாஸ் தலைவர் கொலையில் ஈரான் அதிகாரிகள் மீது சந்தேகம்

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியா கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படை (ஐ.ஆர்.ஜி.சி.) அதிகாரிகள் மீது சந்தேகம் எழுந்துள்ளது. இவர்கள் இஸ்ரேல் உளவு அமைப்பான மொசாத்தின் ஏஜெண்டுகளாக செயல்பட்டனர் என தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 இல் ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 1,200 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். அப்போது முதல் இஸ்ரேல் உளவுப் படையான மொசாட், ஹமாஸ் முக்கியபுள்ளிகளை குறி வைத்து தாக்கி வருகிறது. இந்த வரிசையில் ஹமாஸின் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியா, ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஜூலை 31 இல் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக நாள்தோறும் புதிய தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் வெளியிட்ட செய்தியில்,

“ஈரான் இராணுவத்தின் உயர் பிரிவான இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படையின் (ஐ.ஆர்.ஜி.சி) கட்டுப்பாட்டில் உள்ள விருந்தினர் மாளிகையில் ஹனியா தங்கினார். அவர் தங்கியிருந்த அறையில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறியது. இதில் ஹனியா உயிரிழந்தார்.

இதன் பின்னணியில் இஸ்ரேல் உளவுப் படையான மொசாத் இருக்கிறது. மொசாத்தின் ஏஜெண்டுகளாக செயல்பட்ட ஈரானின் ஐ.ஆர்.ஜி.சி. படையின் அதிகாரிகள், வீரர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர்.” என்று தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் டெலிகிராப் நாளிதழ் வெளியிட்ட செய்தியில், “இஸ்மாயில் ஹனியா அடிக்கடி தங்கும் டெஹ்ரானில் உள்ள விருந்தினர் மாளிகையின் 3 அறைகளில் முன்கூட்டியே வெடிகுண்டுகள் மறைத்து வைக்கப்பட்டன. இந்த வெடிகுண்டுகளை ஈரானின் ஐ.ஆர்.ஜி.சி. படையை சேர்ந்த 2 அதிகாரிகள் மறைத்து வைத்தனர். இவர்கள் மொசாத்தின் ஏஜெண்டுகள் ஆவர். குறிப்பிட்ட அறையில் ஹனியா தங்கியிருப்பது உறுதி செய்யப்பட்டதும் ரிமோட் கண்ட்ரோல் மூலம் வெடிகுண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன” என தெரிவித்துள்ளது.

இஸ்மாயில் ஹனியா கொலையில் ஐ.ஆர்.ஜி.சி. படையினருக்கு தொடர்பு இருப்பது குறித்து ஈரான் அரசு தரப்பில் அதிகாரப்பூர்வமாக எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை. எனினும் ஐ.ஆர்.ஜி.சி. படையை சேர்ந்த அதிகாரிகள், வீரர்கள் உட்பட 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகி உள்ளன.

ஈரான் ராணுவம் உட்பட அனைத்து துறைகளிலும் இஸ்ரேலின் மொசாத் ஏஜெண்டுகள் ஊடுருவி இருப்பதாகக் கூறப்படுகிறது.



பக்கங்கள் - 5

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 04/08/2024

## அல்பேர்ட்டாவில் இன்று இடியுடன் பெரும் மழை

**அல்பேர்ட்டா, ஓகஸ்ட் 04**

இன்று அல்பேர்ட்டாவில் இடியுடன் கூடிய கடும் மழை பொழியக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

C2 ▶



# இஸ்ரேலுக்குப் பயணங்களை தவிர்க்க கனடா ஆலோசனை

**ஒன்ராறியோ, ஓகஸ்ட் 04**

**“தற்போது நிலவும் பிராந்திய ஆயுத மோதல் மற்றும் கணிக்க முடியாத பாதுகாப்பு நிலைமை” காரணமாகஇஸ்ரேலுக்கானஅனைத்துபயணங்களையும் தவிர்க்குமாறு கனேடிய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.**

**இஸ்ரேலுக்கான வெளிவிவகார அமைச்சின் முந்தைய பயண ஆலோசனையானது அத்தியாவசிய மற்ற பயணங்களுக்கு எதிராக மட்டுமே வலியுறுத்தப்பட்டது.**

**“தற்போது நிலவும் பிராந்திய ஆயுத மோதல்கள் மற்றும் கணிக்க முடியாத பாதுகாப்பு சூழ்நிலை காரணமாக அனைத்து பயணங்களையும் தவிர்க்கவும். எச்சரிக்கை இல்லாமல் பாதுகாப்பு நிலைமை மேலும் மோசமடையலாம்“ என புதிய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.**

**அண்டை நாடான லெபனானை தளமாகக் கொண்ட ஒரு போராளிக் குழுவான இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே சமீபத்திய நடவடிக்கைகளின் பின்னணியில் பரந்த பிராந்திய மோதலுக்கான அச்சம் அதிகரித்துள்ளது.**

# விசிட்டர் விசாவில் கனடாவுக்கு வந்த தமிழர்கள் வேலைச் சான்றிதழுக்காக ஏமாற்றப்படும் நிலை!

கனடாவிற்கு தற்காலிக விசாவில் சென்ற தமிழர்கள் உட்பட பல வெளிநாட்டவர்கள் அங்கு பணியாற்ற முயற்சித்து வருகின்றனர்.

சட்டரீதியாக பணியாற்றுவதற்கு LMIA (Labour Market Impact Assessment) எனும் தொழிலாளர் சந்தை தாக்க மதிப்பீடு ஆவணம் முக்கியமானதாகும்.

அதனை சட்டவிரோதமான பெற்றுக்கொள்ள பெருந்தொகை பணத்தைப் பலரும் செலுத்தி வருகின்றனர்.

விசிட்டர் விசாவில் சென்ற பல தமிழர்கள், இந்த ஆவணத்தை பெற 25 ஆயிரம்

C2 ▶






# மனைவியையே கொடூரமாகக் கொலை செய்த இந்தியர் ஒருவருக்கு கனடாவில் ஆயுள் சிறை

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஒகஸ்ட் 4**

தன்னை கனடாவுக்கு வரவழைத்த தன் மனைவியையே கொடூரமாகக் கொலை செய்தார் இந்தியர் ஒருவர்.

அவரால் குடும்பமே குலைந்து போனதாகக் கருத்து தெரிவித்துள்ளார் வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி.

1999ஆம் ஆண்டு, இந்தியாவில் கமல்ஜீத் சிங் என்ற பெண்ணுக்கும், இந்தர்ஜீத் சிங் சந்து என்பவருக்கும் திருமணம் நிகழ்ந்தது.

கமல்ஜீத் பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள எப்போர்ட்ஸ்போட் நகரில் வாழ்ந்துவந்த நிலையில், இந்தர்ஜீத் கனடாவுக்கு புலம்பெயர்வதற்கு ஸ்பொன்ஸர் செய்தார் அவர்.

தம்பதியருக்கு முறையே 23 மற்றும் 18 வயதுடைய இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

இருவருக்கும் அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் உருவான நிலையில், கணவர் தன்னைத் தாக்கவும் துவங்க, ஒரு கட்டத்தில் கணவரை விவாகரத்து செய்ய முடிவு செய்துள்ளார் கமல்ஜீத்.

ஏற்கனவே உடல் ரீதியாகவும் மனோரீதியாகவும் மனைவியைத் தாக்கியிருந்தும், அவர் தன்னை விவாகரத்துக்கு விண்ணப்பித்துள்ளதை அறிந்த இந்தர்ஜீத் ஆத்திரமடைந்துள்ளார்.

2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28ஆம் திகதி, தன் மனைவி கமல்ஜீத்தைக் கொலை செய்துவிட்டார் அவரது கணவர்.




திட்டமிட்டு, கத்தி வாங்கி வைத்துக்கொண்டு, தான் தங்கியிருந்த தன் பெற்றோர் வீட்டுக்கு மனைவியை வரவழைத்த இந்தர்ஜீத், அவர் எதிர்பாராத நேரத்தில் அவரைக் கத்தியால் தாக்கியுள்ளார்.

இந்தர்ஜீத்தின் தாய் வந்து மகன் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கியும், கத்தியால் குத்தப்பட்டு இரத்தம் சொட்டும் நிலையிலிருந்த கமல்ஜீத்தை தன் கையாலேயே கழுத்தை நெரித்துக் கொன்றுள்ளார் இந்தர்ஜீத்.

இந்தர்ஜீத்துக்கு, 13 ஆண்டுகளுக்கு பரோல் கிடைக்காத வகையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தீர்ப்பளித்த நீதிபதியான Dev Dley கூறியுள்ள வார்த்தைகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

கமல்ஜீத்தின் மரணம், அவரது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு அளவிடமுடியாத துன்பத்தையும் மன அழுத்தத்தையும் வலிமிக்க இழப்பையும் அளித்துள்ளதை மறுக்க இயலாது, இந்தர்ஜீத்தின் செயலால் குடும்பமே சிதறிப்போய்விட்டது, என்று கூறியுள்ளார் நீதிபதி Dev Dley.

இந்தர்ஜீத்தின் சுயநலத்தாலும், முன்பின் யோசிக்காமல் மேற்கொண்ட வன்முறையாலும், தாங்கள் அன்பும் பாசமும் வைத்திருந்த தாயை பிள்ளைகள் இழந்துவிட்டார்கள்.

இந்தர்ஜீத்துடைய பெற்றோர் இந்தியாவுக்குத் திரும்பிவிட்டார்கள். அவரது நண்பர்களும் சக ஊழியர்களும் அவரை ஒதுக்கிவிட்டார்கள். அவருடைய பிள்ளைகள் அவருடைய வாழ்வில் எந்தப் பங்கும் வகிக்க விரும்பவில்லை. இந்தர்ஜீத் இனி தன் வாழ்வை தனிமையில்தான் செலவிடவேண்டும் என்று கூறியுள்ளார் நீதிபதி.

---

**விசிட்டர் விசாவில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டொலர்களை வரை செலுத்துகின்றனர்.

இந்நிலையில் LMIA ஆவணத்தை பெற பெருந்தொகை பணத்தை செலுத்திய பலர் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இவர்களில் இலங்கைத் தமிழர்களும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டுஆஜயு ஆவணத்தை மிகவும் இலகுவாக பெற்றுத்தருவார்கள் எனக் கூறி பல முகவர்கள் செயற்படுகின்றனர். அவ்வாறான முகவர்கள் பணத்தை பெற்றுக்கொண்டு ஏமாற்றுகின்றனர் எனவும் தெரிய வந்துள்ளது.

இவ்வாறான ஆவணங்களை பெற முயற்சிப்போர் போலியான முகவர்களை நம்பி ஏமாற வேண்டாம் என பாதிக்கப்பட்ட தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

---

**அல்பேர்ட்டாவில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய தினம் அல்பேர்ட்டா முழுவதும் கடுமையான இடியுடன் கூடிய மழை பெய்தது.

கல்கரிக்கு அருகிலுள்ள மத்திய மலையடிவாரத்தில் கடுமையான இடியுடன் கூடிய மழைக்கான அபாயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழைக்கான பரவலான ஆபத்து ஞாயிற்றுக்கிழமை முழுவதும் அல்பேர்ட்டாவை சூழ்ந்திருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மத்திய அடிவாரத்தில் புயல்களுக்குத் தோதான வாய்ப்புத் தோன்றும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

# வெனிசுலா தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து

# கனடாவின் தெளிவான பிரதிபலிப்பு வேண்டும்

## ஒன்ராரியோ நாடாளுமன்றத்திற்கு வெளியே கூடி வற்புறுத்து






ஒன்ராரியோ, ஓகஸ்ட்04

சர்ச்சைக்குரிய வெனிசுலா தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஒட்டாவாவிடம் இருந்து வலுவான பதிலைக் கோருவதற்கும் சுமார் 300 பேர் இன்று ஒன்ராரியோ நாடாளுமன்றத்திற்கு வெளியே டொராண்டோ நகரின் மையப்பகுதியில் கூடினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தலில் அதிபர் ரெபெக்கா சர்பாட்டி வெற்றி பெற்றார் என அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

டொராண்டோ வெனிசுலா சமூகத்தின் அமைப்பாளரான நிக்கலோஸ் மதுரோ, இவ்விடயத்தில் கனடாவின் பதில் உறுதியற்றது எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா போன்ற பிற நாடுகள் தேர்தலை ‘மோசடி’ என்று கருதுகின்றன என்று அவர் கூறுகிறார். மேலும் மதுரோ ஒரு சர்வாதிகாரி என்று நினைக்கிறதா என்பதை கனடா சொல்ல வேண்டும் என சர்பாட்டி கோரியுள்ளார்.

பிடென் நிர்வாகம் அதன் ஆதரவை எதிர்ப்பின் பின்னால் உறுதியாக வீசியது. எட்மண்டோ கோன்சாலஸை வெற்றியாளராக அங்கீகரித்து தேசிய தேர்தல் கவுன்சிலின் அதிகாரப்பூர்வ முடிவுகளை இழிவுபடுத்துகிறது.

# இரு வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் புரிந்த மூன்று இளைஞர்கள்!

## பிராம்ப்டனில் அவர்களின் கத்திக் குத்தில் மூவருக்குப் படுகாயம்

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 04**

வியாழன் அன்று பிராம்ப்டனில் இரண்டு தனித்தனி வீடுகளுக்குள் அத்துமீறிப் பிரவேசித்தமை தொடர்பாக மூன்று இளைஞர்கள் குற்றம் சாட்டப் பட்டுள்ளனர்.

அதில் ஒன்று மூன்று பேர் கத்தி யால் குத்தப்பட்ட சம்பவமும் உள் ளடங்கும்.

அதிகாலை 2:45 மணியளவில் கிரெடிட்வியூ ரோடு மற்றும் மேபெக் டிரைவ் அருகே உள்ள ஒரு வீட்டிற் குள் நான்கு சந்தேக நபர்கள் வலுக் கட்டாயமாக நுழைய முயன்றனர் என பீல் பிராந்திய பொலிஸார் தெரி வித்தனர்.


அவர்கள் வெள்ளை நிற அகுரா செடானில் தப்பிச் சென்றனர். இது திருடப்பட்ட வாகனமாக இருக்கலாம் எனப் பொலிஸார் கருதுகின்றனர்.




சிறிது நேரம் கழித்து, அதே சந் தேக நபர்கள் பிரிஸ்டேல் டிரைவ் மற் றும் மேஃபீல்ட் ரோடு பகுதியில் உள்ள மற்றொரு வீட்டிற்கு வந்து வலுக்கட் டாயமாக நுழைந்தனர் எனக் கூறப்படு கிறது.

வெளியே நிறுத்தப்பட்டிருந்த சொகுசு வாகனத்தின் சாவியை சந்தேக நபர்கள் கேட்டனர் எனப் பொலிஸார் குற்றம் சாட்டுகின்றனர்.

பாதிக்கப்பட்ட மூவரும் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



# ரொறொன்ரோவில் நேற்றிரவு கத்திக் குத்தில் இருவர் காயம்

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 04**

ரொறொன்ரோவின் கடற்பகுதிக்கு அருகில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் இருவர் படுகாயமடைந் துள்ளனர்.

நேற்று இரவு 7:40 மணிக்கு ரிமெம் பரன்ஸ் டிரைவ் மற்றும் லேக் ஷோர் பவுல்வர்ட் வெஸ்ட் ஆகிய இடங்களுக்கு ரொறன்ரோ பொலிஸார் அழைக்கப் பட்டுள்ளனர்.

குத்தப்பட்ட காயங்களுடன் இரண்டு பேரை கண்டறிந்த பொலிஸார், அவர்கள் இருவரையும் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்ட னர்.

அத்துடன், சம்பவ இடத்தில் இருந்து இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'எங்கள் காவலில் உள்ள இருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்ட இருவர் என்று நாங்கள் நம்புகிறோம்,' என்று அவர் கூறினார்.



# வின்னிபெக்கில் நடக்கும் இடைத்தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி வேட்பாளருக்கு ஆதரவு

## தொழிற்சங்கம் ஒன்றின் துணைத் தலைவர் அறிவிப்பு

**மனிடோபா, ஓகஸ்ட் 04**

வின்னிபெக்கில் நடக்கவிருக்கும் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் கன்சர்வேடிவ் வேட்பாளருக்கு தொழிற்சங்கம் ஒன்றின் துணைத் தலைவர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

நீண்ட காலம் புதிய ஜனநாயகக் கட்சியின் கோட்டையாக இருந்து வரும் இந்த தேர்தல் தொகுதியில் புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரை வீழ்த்துவதற்கான தனது முயற்சியில் ஒரு பெரிய தொழிற்சங்கத்தின் சர்வதேச துணைத் தலைவரிடமிருந்து கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளருக்கு ஆதரவு கிடைத்துள்ளது.

நாட்டில் 70,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தொழிற்சங்கமான இன்டர்நேஷனல் பிரதர்ஹூட் ஒவ் எலக்ட்ரிக்கல் வேர்க்கர்ஸ் - கனடா (மின்சார தொழிலாளர்களின் சர்வதேச சகோதரத்துவம் - கனடா) அமைப்பின், ரஸ் ஷுவ்சுக், சக IBEW உறுப்பினரும் கன்சர்வேட்டிவ் வேட்பாளருமான கொலின் ரெனால்ட்ஸ்க்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

சமூக ஊடகத்தில் ஓர் அறிக்கையில், ஷுவ்சுக் 20 ஆண்டுகளுக்கும் மேலாக ரெனால்ட்ஸை அறிந்திருக்கின்றார் எனவும், கன்சர்வேடிவ் உறுப்பினர் "தொழிற்சங்கங்கள் மற்றும் உழைக்கும் மக்களின் இயக்கவியலை" புரிந்துகொண்டவர் எனவும் கூறியுள்ளார்.

# சுத்தியலால் தாக்கிய நபரை பொலிஸார் தேடி வேட்டை!





**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 04**

நேற்று காலை பார்க்டேலில் நபர் ஒருவரை சுத்தியலால் தாக்கினார் எனக் கூறப்படும் 44 வயதுடைய நபரை டொராண்டோ பொலிஸார் தேடி வருகின்றனர்.

குயின் ஸ்ட்ரீட் வெஸ்ட் மற்றும் கிங் ஸ்ட்ரீட் வெஸ்ட் அருகே இடம்பெற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் தப்பி ஓடினார் எனவும், பின்னர் பலத்த காயங்களுடன் மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை, சந்தேக நபர் டொராண்டோவில் வசிக்கும் வாரன் டுவைர் என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டார். அவர் கொலை முயற்சிக்காகத் தேடப்பட்டு வருகிறார்.